# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்),
நந்தனம், சென்னை–600 035. தொலைபேசி எண்.044–2951 5590

**<u>முன்னிலை</u>**

**திரு.பி.தாமரைக்கண்ணன்,இ.கா.ப.(ஓய்வு),**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண்.SA 4039/விசாரணை/E/2023</u>**

திரு.R.அசோகன் -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/
வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர்,
வருவாய் கோட்ட அலுவலகம்,
திருமங்கலம், மதுரை மாவட்டம். .. பொது அதிகார அமைப்பு

******

**<u>இறுதி ஆணை</u>**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தால் 11.09.2025 அன்று விசாரணையின் அடிப்படையில், பொதுத் தகவல் அலுவலரால் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையின் அடிப்படையில், இவ்வாணையத்தால் 18.12.2025 அன்று கீழ்க்கண்ட உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன :-

1. மேல்முறையீட்டாளர் தனக்கு தகவல் தேவையில்லை என்று தெரிவித்துள்ளதன் அடிப்படையில், தகவல் வழங்குவதை பொறுத்தமட்டில், இவ்வழக்கினை இத்துடன் முற்றாக்கம் செய்து இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

2. இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள், **திருமங்கலம் வருவாய் கோட்டாட்சியர்/மேல்முறையீட்டு அலுவலர்,** மேல்முறையிட்டாளரின் 12.12.2022 தேதியிட்ட சட்டப்பிரிவு 6(1) மனுவினை பெற்று குறித்துரைக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் தகவல் வழங்காத பொதுத் தகவல் அலுவலர் யார் என்பதை கண்டறிந்து, அவர் மீது *தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 சட்டப்பிரிவு 20(1) மற்றும் 20(2)-ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ள அவரது உயரதிகாரிக்கு ஏன் பரிந்துரைக்கக்கூடாது என்பதற்கான எழுத்துமூலமான விளக்கத்தை பெற்று,* ***இவ்வாணையத்தில் 20.01.2026 அன்று திருமங்கலம் வருவாய் கோட்ட அலுவலக பொதுத் தகவல் அலுவலர் மூலம் நேரில் சமர்ப்பிக்குமாறு*** **திருமங்கலம் வருவாய் கோட்டாட்சியர்/*மேல்முறையீட்டு அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடுகிறது.***

2. மேற்குறித்த உத்தரவின் அடிப்படையில், திருமங்கலம் வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர்/பொதுத் தகவல் அலுவலர் சார்பாக திருமங்கலம் வட்டாட்சியர் அலுவலக பொதுத் தகவல் அலுவலர் திரு.முனியசாமி இவ்வாணையத்தில் 10.02.2026 அன்று நேரில் ஆஜராகி, திருமங்கலம் வருவாய் கோட்டாட்சியரின் 19.01.2026 தேதியிட்ட அறிக்கையை ஆணையத்தின் முன் தாக்கல் செய்தார். திருமங்கலம் வருவாய் கோட்டாட்சியர், மேற்குறித்த அறிக்கையில் முன்னாள்

வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளரின் 14.01.2026 தேதியிட்ட எழுத்துமூலமான விளக்கத்தை இணைத்து சமர்ப்பித்துள்ளார்.

3. முன்னாள் வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர் 14.01.2026 தேதியிட்ட எழுத்துமூலமான விளக்கத்தில், மேல்முறையீட்டாளரின் 12.12.2022 தேதியிட்ட சட்டப்பிரிவு 6(1) மனுவானது தங்கள் அலுவலகத்தில் 13.12.2022 அன்று கிடைக்கப் பெற்று, 21.12.2022 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக தகவல்கள் 22.12.2022 அன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து, மேற்குறித்த கடிதத்தின் நகலை இணைத்து சமர்ப்பித்துள்ளதை ஏற்று, அவர் மீதான நடவடிக்கையை இவ்வாணையம் இத்துடன் கைவிடுகிறது.

**ஆணை நாள்: 06.04.2026** **ஒம்/-.பி.தாமரைக் கண்ணன்,**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA 4039/விசாரணை/E/2023</u>**

பெறுநர்
மேல்முறையீட்டு அலுவலர்/வருவாய் கோட்டாட்சியர்,
வருவாய் கோட்ட அலுவலகம்,
திருமங்கலம்,
மதுரை மாவட்டம்-625 706.

பொதுத் தகவல் அலுவலர்/
வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர்,
வருவாய் கோட்ட அலுவலகம்,
திருமங்கலம், மதுரை மாவட்டம்-625 706.

திரு.R.அசோகன்
5/3 பாரதி தெரு,
திருமங்கலம் வட்டம்,
மதுரை மாவட்டம்-625 706.

Copy to: File

RJ/PS 7.4